ந.க. 1589/ 2007 / அ3

உதவி ஆணையர் (வவ) அலுவலகம்,
வரிவிதிப்புச்சரகம் –2, தஞ்சாவூர்.

நாள்: .2010.

<u>ஏல அறிவிப்பு</u>

அய்யா,

பொருள்: வரி நிலுவை – தநாபொவிவச '59 –
தி/ள். டாரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், தஞ்சாவூர் –
வரிநிலுவை ரூ. 6,46,479/– ஏலம் விடுதல் –
தொடர்பாக.

பார்வை: தஞ்சாவூர் மாவட்ட அரசிதழ் எண். 2, நாள்: 06.01.10.

+++++++++++++++

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் நீலகிரி தெற்கு தோட்டம், திரு. இ.குழந்தைசாமி, தி/ள். டாரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ், எண்.9–4வது தெரு, அருளானந்தா நகர், தஞ்சாவூர் என்பவருக்குப் பிறப்பிக்கப்பட்ட ஜப்தி நோட்டீஸ் இதனால் தங்களுக்கு தெரிவிக்கிறதென்னவென்றால் தாங்கள் தஞ்சாவூர்–2 வரிவிதிப்பு சரகத்தில் " டாரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ்" என்னும் நிறுவனத்தை நடத்திய வகையில் அரசுக்கு ரூ. 6,46,479/–( ரூபாய் ஆறு இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து நானூற்று எழுபத்து ஒன்பது மட்டும்)– யை வரிகள் மற்றும் தண்டத் தொகைகளாக செலுத்தப்பட வேண்டிய நிலுவையாக உள்ளது.

தங்களிடம் மேற்கண்ட நிலுவை தொகையினை வசூலிக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் பயனற்றுப் போய் விட்டதால், தங்களது கீழ்க்கண்ட விவரப்படியான அசையா சொத்தினை 29.04.2010 வியாழக்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்திற்கு கொண்டுவந்து, நிலுவைக்கு ஈடு செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>சொத்து விவரம்</u>

1. தஞ்சாவூர் ரெவின்யூ டிஸ்ட்ரிக்ட், வல்லம் சப் டிவிசன், தஞ்சாவூர் வட்டம் 115–ஆம் எண் மருங்குளம் வட்டம், பழைய புல எண் 116/2, ஏக்கர் 06 சென்ட் 24–ல் உள் விவரம் மேல்பாகம் ஏக்கர் 2, சென்ட் 29–ல் (புதிய புல எண் 116/2ஏ–ல் ஏர்ஸ் 1.33.0–க்கு ஏக்கர் 3.29 சென்டில் மேல்புறம் ஏர்ஸ் 0.78–க்கு சென்ட் 193–க்கு எல்லை.

நான்குமால் – புன்செய்க்கு (மேல்) 2 ஆவது சொத்துக்கு (வடக்கு), 116/1E, 1F, 1G-க்கு (கிழக்கு) வல்லம் – ஒரத்தநாடு ரோட்டுக்கு (தெற்கு) இதற்கு உட்பட்டது.

2. மேற்படிய நிறுமத்திய புன்செய் புல எண் 116/5–க்கு புதிய புல எண் 116/5ஏ1–ல் மேல்புறம் ஏர்ஸ் 3–ம் சென்ட் 7 இதற்கு எல்லை.

நான்குமால்– 1ஆவது சொத்துக்கு (தெற்கு), எங்கள் புன்செய்க்கும் (மேல்) RS எண் 116/5ஏ2–க்கு (வடக்கு), RS எண் 116/(9)–க்கு (கிழக்கு) இதற்கு உட்பட்டது (2.00 ஏக்கர்).

வல்லம் துணை பதிவாளர் பத்திர எண். 734/95.

ஏல நாள்: 29.04.2010.
ஏலம் நடைபெறும் இடம்: கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், மருங்குளம்.

உதவி ஆணையர் (வவ),
தஞ்சாவூர்–2.
5.4.10

பெறுநர்
திரு. இ.குழந்தைசாமி,
தி/ள். டாரி இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,
எண். 9, 4–வது தெரு,
அருளானந்தா நகர்,
தஞ்சாவூர்.

நகல்: துணை ஆணையர் (வவ), தஞ்சாவூர் அவர்களுக்கு தகவலின்பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.

: வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் அவர்களுக்கு ஏலம் தொடர்பான விவரங்களை தண்டோரா மூலம் அறிவிக்க கிராம நிர்வாக அலுவலருக்கு உரிய ஆணைகள் வழங்கும் பொருட்டும் இரட்டிப்பில் அனுப்பி வைக்கப்படுகிறது.

: கிராம நிர்வாக அலுவலர், மருங்குளம்.
ஏலம் தொடர்பாக தண்டோரா மூலம் விளம்பரம் செய்யும் பொருட்டும் ஏலநாள் அன்று ஏலத்தினை முன்னின்று நடத்திடும் பொருட்டும் அனுப்பி வைக்கப்படுகிறது.

: சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், வல்லம் – இரட்டிப்பில் பரந்த விளம்பரம் செய்யும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.

: ஆய்வாளர், காவல் துறை, மருத்துவக்கல்லூரி, தஞ்சாவூர்.

: விளம்பரப் பலகை.

உபரி: 10